Vol.30 | No. 9| SEPTEMBER 2026
The Official Organ of the Diocese of Thuckalay

இறையருள்



Aug 2

ST.ALPHONSA SHRINE FEAST DAY QURBANA AT NAGERCOIL

Aug 4

VIANNEY DAY CELEBRATION AT MUKKOOTTUKAL

Aug 11&12

ONGOING FORMATION FOR JUNIOR PRIESTS AT SANGAMAM

The Official Organ of the Diocese of Thuckalay
Volume 30 No : 9 September 2026

இறையருள்
IRAIARUL

உள்ளே...

Bishop's Message	02
மறைக்கல்வி	07
குழந்தை ஈசோ இயக்கம்	09
சிறுமலர் மிஷன் லீக்	10
உறவிய மலர்	11
சீனாய் இறையியல் கல்வி மையம்	14
கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்	15
வின்சென்ட் தே பவுல் சபை	18
மறைமாவட்ட செய்திகள்	20
மறைவட்ட செய்திகள்	23
தென்காசி மறைதள செய்திகள்	29
MONTHLY AGENDA - September 2026	31

Editorial Board

Patron
His Excellency
Mar George Rajendran SDB

Chief Editor
Fr. Thomas Kuzhikodil

Associate Editors
Fr.Thomas Sathiyanesan
Mr. S.M.Edwinson

Published by:
Fr. Thomas Kuzhikodil
Bishop's House
Post Box No . 12
Thuckalay - 629 175
K.K.Dist,Tamil Nadu,India.

Design & Layout
Merin Sujith M.R

Printed at
Pulari Offset Press
Thuckalay
Ph:04651-252570

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/185/2026 **31 August 2026**

Dear Readers,

Warm greetings to each one of you from the Bishop's House, Thuckalay!

As we enter September, the Church sets before us one of the most profound and mysterious feasts of the liturgical year — the Exaltation of the Holy Cross, celebrated on the fourteenth of this month. I write to you this circular not merely to remind you of it, but to invite you to deeper reflection on what this feast means for us, who, by the grace of God, have chosen to spend our lives at the foot of that same Cross in priestly ministry.

The Mystery We Celebrate

The Exaltation of the Holy Cross recalls St Helena's discovery of the true Cross in the fourth century and its solemn elevation before the faithful of Jerusalem. Yet beneath this historical memory lies a mystery far greater than any relic or ceremony: the Cross, once an instrument of the most degrading punishment the ancient world could devise, has become for us the throne of glory, the tree of life, and the sign by which the world is saved. What was raised in shame on Calvary is raised again in triumph each year, because on it hung the Saviour of the world.

St Paul reminds us that we preach Christ crucified — a stumbling block to some and folly to others, yet to those who are called, the power and the wisdom of God. This paradox stands at the very centre of our faith and, in a special way, at the centre of our vocation. We are men and women who have publicly and permanently bound our lives to a crucified Lord. Each September, the feast of the Exaltation invites us to look again at the Cross we carry and to ask ourselves honestly: have we truly exalted it in our hearts, or have we quietly tried to domesticate it, to make our priesthood and religious life

comfortable, safe, and free of real cost?

There is, too, a deeper symmetry the Fathers of the Church loved to contemplate: as death entered the world through a tree in the garden, so life is restored through a tree on Calvary. The Cross is thus not merely an image of suffering endured, but the new Tree of Life planted at the centre of history, its branches reaching out to gather every nation and every wound into the mercy of God. Christ himself foretold this exaltation when he said, “When I am lifted up from the earth, I will draw all people to myself” — a lifting up that is at once his crucifixion, his resurrection, and his glorification, three mysteries inseparably bound in the one wood. To exalt the Cross, then, is not to glorify pain for its own sake, but to proclaim that God has taken the worst that human cruelty can do and, definitively, transformed it into the instrument of the world’s healing. This is the hope we are asked to carry with us into every hospital room, every confessional, every mission chapel, and every quiet act of service this September.

The Cross and Our Priestly Life

At its root, ordination is an exaltation of the Cross in one’s own body and life. When a priest raises his hands at the altar, he does what Christ did on the wood of the Cross — he offers himself, together with the Lord, for the life of the world. This is similar to a religious pronouncing the vows of poverty, chastity, and obedience; he or she nails to that same wood every claim of self-will, every attachment to comfort, and every desire to belong first to oneself. Ours is not a life that avoids the Cross; it is one that has freely and joyfully embraced it as the very shape of love.

This is not always easy to remember amid the routine of ministry — the endless meetings, the financial worries of an institution, the loneliness that can visit even the busiest rectory or convent, and the misunderstandings from within and without. It is precisely here, in the ordinary wear and tear of daily service, that the Cross ceases to be a devotional image and becomes flesh. Every act of patience with a difficult parishioner, every hour spent in the confessional listening to human weakness, every long journey undertaken to reach a single family, every night interrupted for a sick call, every silence accepted

rather than a self-defensive word — these are the small, unnoticed exaltations of the Cross that make up a faithfully lived priestly or religious life. I ask you, dear Fathers, to see in these daily crosses not merely a burden to be endured, but the very substance of your configuration to Christ the Priest and Victim.

Carrying the Cross to the Extended Territories and the Thenkasi Mission

I cannot write to you this month without speaking, with deep gratitude and admiration, of those among you who live out this mystery in the most demanding circumstances — our priests and religious labouring in the extended mission territory and in the Thenkasi mission of our Eparchy. While many of us minister in established parishes with settled communities, familiar faces, and the ordinary support structures of Church life, some among us have gone further out — into areas where the Church is still young, the Catholic presence is thin or nil, the nearest brother priest may be an hour or more away, and every institution, every chapel, every catechism class has had to be built almost from nothing. In the villages and small towns spreading out to Thenkasi, Thoothukudi, Thirunelveli, Ramanathapuram, Sivagangai, Virudunagar, Madurai and Theni districts, entrusted to our Eparchy, our priests and religious go from village to village and street to street, carrying — quite literally, at times — the Cross to people who might otherwise never encounter it. They walk into homes where the Gospel has never been proclaimed. They sit with families in unfamiliar languages and customs, learning patience before they can even begin to teach. They celebrate the Eucharist in modest structures that would seem impossibly small and simple to those used to the settled parishes of our heartland, yet they do so with the same reverence and joy as if they stood before the grandest altar.

I have visited many times in all these mission stations, and what has struck me each time is not hardship on display, but hardship quietly absorbed — absorbed with a smile, without complaint, simply as part of the work God has given them. These are men and women who have left behind the comforts many of us take for granted: proximity to

family, familiar food and climate, the company of fellow priests who share their mother tongue, the medical facilities and conveniences of larger towns, and even, at times, basic amenities that the rest of us assume without a thought. They have freely exchanged all this for the privilege of keeping Christ's mission alive in places the world has largely overlooked.

In this circular, I wish to express my profound admiration, and that of the whole Eparchy, for this quiet, sustained sacrifice. Mission work can easily become invisible precisely because it is faithful and unspectacular — no headlines are written about our priests or catechist walking for kilometres every evening to teach a handful of children, or about a Sister who has spent years learning a local dialect so she might be truly present to the people she serves. Yet it is exactly this hidden, patient carrying of the Cross that keeps the flame of the Gospel burning in our extended territory and in Thenkasi Mission. Every Eucharist celebrated there, every child baptised, every sick person anointed, and every family strengthened in faith is a small but real exaltation of the Cross — raised again, in our own time, in our own Eparchy, by hands and hearts we should never take for granted.

An Invitation for the Feast Day

On this year's feast of the Exaltation of the Holy Cross, I ask every parish, institution, and religious community of the Eparchy to do three things. First, to celebrate the Holy Qurbana with special solemnity as our liturgy demands, including a rite of veneration of the Cross, so that our people may renew their reverence for the sign of our salvation. Second, to devote part of that day's homily or catechesis to the meaning of the Cross in the life of every baptised Christian, and, in a special way, in priestly and religious vocation. Third, and closest to my heart, I ask that each of you dear fathers to remember, in the Qurbana and in personal prayer, our missionary priests and religious of the extended territory and of Thenkasi by name, and that, wherever possible, a concrete gesture of solidarity — a letter, a gift, an offer of temporary help, or simply a sustained commitment to pray for them — be extended to them this month.

Dear Fathers, the Cross we exalt on the fourteenth of September is not an abstraction. It has a face in each of you who has said yes to Christ in the priesthood or in consecrated life, and this year, in particular, it has the faces of our brothers and sisters who serve quietly and heroically in our mission areas. May this feast renew in all of us the grace to embrace our own crosses without bitterness, to support one another's crosses without judgement, and to look, always, beyond the wood itself to the love that hung upon it. I entrust each of you, especially our missionaries in the extended territory and in Thenkasi, to the protection of Mary, Mother of Sorrows, who stood faithfully at the foot of the Cross. I invoke the Triune God's blessing upon you all.

In August, we came together as fellow workers of the Eparchy to celebrate the feast of St John Maria Vianney. This celebration gave us an opportunity to reflect on our priesthood and to resolve to live it as St John Maria Vianney did, administering the sacraments, especially the sacrament of reconciliation, with greater dedication. Let us make use of occasions such as the feasts of our parishes' patron saints to strengthen the faith of our people. In September, we shall celebrate one of the important feasts of Our Blessed Mother, namely the Nativity of Mother Mary. The celebration of this feast is a wonderful opportunity for us to grow in Marian piety. Let us prepare our people well by encouraging them to keep the 8-day fast with greater earnestness. Let us make the celebration of this feast meaningful in our churches. Kindly keep the mission of the Church and the needs of our Eparchy in your daily prayers.

With my prayers and blessings,

Yours in Christ

BISHOP GEORGE RAJENDRAN sdb * Diocese of Thuckalay *

† George Rajendran SDB
Bishop of Thuckalay

"உலகெங்கும் சென்று
படைப்பிற்கெல்லாம்
நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்பண்டு. [உரோமையர் 10:17]

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்

2026 - 2027 ஆம் ஆண்டு மறைக்கல்வியில் செயல்படுத்த வேண்டிய புதிய செயல் திட்டங்கள் பற்றி கலந்துரையாடவும் புதிய பார்வையிடுதல் குறித்து தேவையான ஆலோசனைகள் வழங்கவும் ஊக்குவிப்பாளர்களின் கூட்டம் 2026 ஆகஸ்ட் 14 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணி முதல் 6.30 மணி வரை கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் இயக்குநர் அருட்தந்தை. டோஜி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்று இந்த வருடம் செயல்படுத்த வேண்டிய புதிய செயல் திட்டங்கள் பற்றியும் மறைக்கல்வி நிலையங்களை பார்வையிடுதலை முன் வைத்து கலந்துரையாடப்பட்டது. மேலும் இந்த வருடம் மறைக்கல்வி நிலையங்களை பார்வையிடுதலுக்கான படிவமும் நியமன கடிதத்திற்கான நகலும் வழங்கப்பட்டது. சுமார் 6.30 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி 9 ஆம் பிரிவு வெற்றிகரமாக முடிந்தது. வகுப்புகள் 2026 ஜூன் 26 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி ஆகஸ்ட் 23 வரை படந்தாலுமூடு, திரு இருதய ஆலய வளாகத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் 5 மணிவரை நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்புகள் 6 ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது. ஜூன் 26 ஞாயிற்றுக்கிழமை தொடக்க வகுப்பு மற்றும் பணிவிடை அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. அபிலாஷ் மற்றும் அருட்தந்தை. ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்களும் ஜூலை 05. ஞாயிற்றுக்கிழமை குணமளிக்கும் அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. தோமஸ் சத்தியநேசன் அவர்களும், ஜூலை 12. ஞாயிற்றுக்கிழமை பத்து கட்டளைகள் பற்றி அருட்தந்தை. ஷிஜோ ஐக்கரகுந்நேல் அவர்களும் ஜூலை 26 ஞாயிற்றுக்கிழமை திருவழிபாடு மற்றும் நுழைவு அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களும் ஆகஸ்ட் 09 ஞாயிற்றுக்கிழமை, நம்பிக்கை அறிக்கை பற்றி அருட்தந்தை. ஜோஸி குளத்தும்ங்கல் அவர்களும் ஆகஸ்ட் 23 ஞாயிற்றுக்கிழமை திருவிவிலியம் குறித்து அருட்தந்தை. கிறிஸ்துதாஸ் அவர்களும் வகுப்புகளை வழிநடத்தினர். மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பில் 28 ஆசிரியர்கள் கலந்துக்கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சி வகுப்பில் கலந்துக்கொண்ட ஆசிரியர்களுக்கு இயக்குநர் அருட்தந்தை. டோஜி அவர்கள் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்
இயக்குனர்

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

குழந்தை ஈசோ இயக்கம்

சீரோ மலபார் திருச்சபையின் சமூக வலுப்படுத்துதல் ஆண்டை நினைவுபடுத்தும் விதமாக குழந்தைகளுக்கு வண்ணம் தீட்டும் போட்டி நடத்தப்பட்டது. எவ்வாறு இறை நம்பிக்கையில் வளர முடியும், எவ்வாறு பிறருக்கு உதவி செய்ய வேண்டும், சிறு வயதிலேயே எவ்வாறு சீரோ மலபார் திருச்சபையின் உறுப்பினராக முடியும் என்பதை எடுத்து காட்டுகின்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு மாதமும் குழந்தைகளுக்கு கொடுக்கின்ற செயல்திட்டங்கள் சரியான முறையில் செய்து மறைவட்ட பொறுப்பாளர்கள் பெற்று, மறைமாவட்ட பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கின்றனர். பொறுப்பாளர்களுக்கான கூட்டம் இணையதளம் வழியாக நடைபெற்று வருகிறது.

அருட்தந்தை ஜோஸ் புரைபிடத்துக்குந்நேல்
இயக்குநர்

வரவிருக்கும் நிகழ்வுகள்

செப்டம்பர் 01 – எட்டு நாள் நோன்பு

செப்டம்பர் 08 – அன்னை மரியாவின் பிறப்புப் பெருவிழா

செப்டம்பர் 16 – அருட்தந்தையர்களுக்கான கூட்டம்

சிறுமலர் MISSION LEAGUE

மிஷன் லீக் இயக்கம்

மிஷன் லீக் பொறுப்பாளர்களுக்கான கூட்டம் ஆகஸ்ட் 04 அன்று இயக்குநர் தந்தை பிறின்டோஅவர்கள் தலைமையில் அழகியமண்டபம் FCC கன்னியர் இல்லத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ராமநாதபுரம் மறைமாவட்டத்தின் மறைபரப்பு பணிகளை பார்வையிட நமது மறைமாவட்டத்தை சார்ந்த அனைத்து பொறுப்பாளர்களும், மறைவட்ட இயக்குநர்கள், பங்கில் உள்ள ஊக்குவிப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மாணவர்கள் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும் என்று நமது ஆயர் அவர்கள் கூறியிருந்தார் என்று, இயக்குநர் தந்தை இதைப்பற்றி விரிவாக விளக்கி கூறினார். அதன்படி ஒவ்வொரு பங்கிலும் இதை பற்றி விரிவாக எடுத்துக்கூறி கலந்து கொள்கிறவர்களின் பெயர்களை வருகின்ற செப்டம்பர் மாதம் 15 ம் தேதிக்கு முன் தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. பின்னர் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவு பெற்றது.

அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்
இயக்குநர்

BIRTHDAYS OF REV. FATHERS - SEPTEMBER 2026	
Fr. Jose Muttathupadam	02
Fr. Jojo Mattathil CMI	09
Fr. Amanto Edakoottathil	16
Fr. Shoji Puthenpurackal	23
Fr. Shinto Souriyamkuzhy	25
Fr. Mathew Kuzhinjalil	28
Fr. Joice Chelachuvattil MCBS	30

உறவிய மலர்

மறைவட்ட அளவிலான கருத்தரங்குகள் மற்றும் உறவிய கையேடு பயிற்சி

உறவிய ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான மறைவட்ட அளவிலான கருத்தரங்குகள், உறவிய கையேட்டைப் பயன்படுத்தும் பயிற்சி ஆகியவை ஆகஸ்ட் மாதம் 9, 16 மற்றும் 30 ஆகிய தேதிகளில் முறையே களியல், மஞ்சாலுமூடு மற்றும் படந்தாலுமூடு மறைவட்டங்களில், மதியம் 2.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெற்றது.

கருத்தரங்குகளின் ஒரு பகுதியாக, உறவிய கையேட்டைப் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிகளும் சிறப்பாக வழங்கப்பட்டது. கருத்தரங்கில் களியல் மறைவட்டத்தில் 83 உறுப்பினர்களும், மஞ்சாலுமூடு மறைவட்டத்தில் 135 உறுப்பினர்களும், படந்தாலுமூடு மறைவட்டத்தில் 112 உறுப்பினர்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர். ஒவ்வொரு மறைவட்டத்தின் முதன்மை பணியாளர்கள் துவக்க உரையாற்றி நிகழ்வை தொடங்கி வைத்தனர். மறைமாவட்ட உறவிய இயக்குநர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் கருத்தரங்குகளை வழிநடத்தி, உறவிய கையேட்டை அறிமுகப்படுத்தி, அதனைச் சிறப்பாகப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விரிவான பயிற்சி வழங்கினார். ஒவ்வொரு மறைவட்ட இயக்குநர்களும் மறைவட்ட உறவிய ஊக்குவிப்பாளர்களும் கருத்தரங்குகளைச் சிறப்பாக ஒருங்கிணைத்தனர். மறைவட்டத்திற்கான உறவிய செயற்குழுக்களும் உருவாக்கப்பட்டது.

ஆறுகாணி மறைவட்டம்

பத்துகாணி புனித தோமையார் ஆலயத்தில், அனைத்து உறவியங்களும் இணைந்து ஓணம் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

பங்குத்தந்தையின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியாக அனைவருக்கும் பாரம்பரிய ஓணசத்யா வழங்கப்பட்டது.

மஞ்சாலுமூடு மறைவட்டம்

மஞ்சாலுமூடு பங்கில், புனித ஜான்மரிய வியானி உறவிய ஆண்டுவிழா ஆகஸ்ட் 9 அன்று உதவி பங்குத்தந்தை அனூப் அகஸ்டின் தலைமையில் நடைபெற்றது. ஆண்டுவிழா பொதுக்கூட்டத்தில் அருட்சகோதரிகள் மற்றும் உறவிய இறைமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

களியல் மறைவட்டம்

மாறப்பாடி பங்கில் வைத்து, ஆகஸ்ட் 9 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, களியல் மறைவட்ட உறவிய ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான அரைநாள் கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்கில் உறவிய கையேட்டைப் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட்டது.

சூசைபுரம் மறைவட்டம்

சூசைபுரம் பங்கில் உறவியத் தலைவர்களுக்கான கூட்டம் ஆகஸ்ட் 3 அன்று மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாப்புலர் மிஷன் தியானம் தொடர்பான பல்வேறு கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜாண்சிலால் அவர்கள் தியானத்தின் முக்கியத்துவத்தையும், அதனைச் சிறப்பாகச் செயல்படுத்துவது தொடர்பான வழிமுறைகளையும் உறவியத் தலைவர்களுக்கு விரிவாக விளக்கினார். தியானம் வெற்றிகரமாக நடைபெற அனைவரின் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் கோரி இக்கூட்டம் நிறைவடைந்தது.

கிள்ளியூர், தேவமாதா ஆலயத்தில் ஆகஸ்ட் 23, 2026 அன்று புனித சகாய அன்னை உறவிய ஆண்டு விழா, திரு. ஹெர்பட் சிங் அவர்களின் இல்லத்தில் மாலை 4.00 மணிக்கு ஜெபமாலையுடன் ஆரம்பமானது.

அருட்தந்தை குரியன் கருத்தேடம் அவர்களின் தலைமையில் கலைநிகழ்ச்சிகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. அருட்சகோதரி விமலா மற்றும் அருட்சகோதரி ராணி மரியா ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இறுதியாக அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. உறவிய உறுப்பினர்கள் அனைவரும் ஆர்வமுடன் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

நித்திரவிளை மறைவட்டம்

நித்திரவிளை தூய ஜெயமாதா ஆலயத்தில், பங்கின் குடும்ப விழாவுடன் இணைந்து அனைத்து உறவியங்களின் ஆண்டுவிழா பொதுக்கூட்டம் ஆகஸ்ட் 10 மற்றும் 11 ஆகிய நாட்களில் இரண்டு நாட்களாகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் கூட்டத்தில் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களும், இரண்டாம் நாள் கூட்டத்தில் அருட்தந்தை ஷிஜோ அவர்களும் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினர். ஒவ்வொரு உறவியத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடத்தி விழாவைச் சிறப்பித்தனர்.

வாறுதட்டு புனித சவேரியார் ஆலயத்தில் புனித எவுபிராசியா நினைவு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. உறவிய மக்கள் காணிக்கைப் பவனியுடன் திருப்பலியைச் சிறப்பித்தனர். திருப்பலி முடிவடைந்த பின்னர், பங்கு மக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

அன்று மாலை 5.00 மணிக்கு உறவிய ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆண்டு விழா பொதுக்கூட்டத்தில் பங்குத்தந்தையும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டு வாழ்த்துரையும் தலைமையுரையும் வழங்கினர். கூட்டத்தின் இடையிடையே உறவிய உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. கூட்டத்தின் இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்
இயக்குனர்

FEASTDAYS OF REV. FATHERS - SEPTEMBER 2026	
Fr. Mathew Judit CMI	11
Fr. Mathew Kuzhinjali	21
Fr. Matheus Robert	21
Fr. Mathew Thekkekutt	21
Fr. Mathew Arekalam CMI	21
Fr. Santhosh Kayyalaparampil CMI	21
Fr. Sinu Panickaparampil CMI	21

சீனாய் இறையியல் கல்வி மையம்

சீனாய் இறையியல் கல்வி மைய மாணவர்கள் இணைந்து 23.8.2026 அன்று மேழக்கோடு, புனித பிரான்சிஸ் திருத்தல ஆலயம் சென்றனர். மாலை 3.00 மணியளவில் நற்கருணை ஆராதனை இயக்குநர் அருட்தந்தை ஷிஜோ அவர்களால் வழிநடத்தப்பட்டது. பின்னர் 4.00 மணியளவில் திருத்தல பங்குத்தந்தை பிபின் அவர்களால் பாவமன்னிப்பு குறித்து வகுப்பு நடத்தினார். அனைவருக்கும் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்பட்டது. செய்தனர். இறுதியில் நற்கருணை ஆசீருடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது.

அருட்தந்தை ஷிஜோ
இயக்குநர்

கன்னியர் இல்லம் மந்திரிப்பு – அரியூர்

மதுரை, அரியூர் திருத்தொண்டு தளத்தில் SABS அருட்சகோதரிகளின் புதிய கன்னியர் இல்லம் (convent) 2026 ஆகஸ்ட் 08 அன்று மேதகு ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. தொடர்ந்து திருப்பலி மற்றும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு SABS மாநிலத்தின் தலைவியான (Provincial Superior) அருட்சகோதரி ரோஸ் மார்ட்டின் SABS மற்றும் அருட்கன்னியர்கள் அனைத்தையும் சிறப்பாக செய்திருந்தனர்.

கன்னியாகுமரி
சமூக சேவை சங்கம்

மாவட்ட அளவிலான ஓணம் பூக்கோலம் போட்டி

ஆகஸ்ட் 20, அன்று களியக்காவிளை, பிரின்ஸ் அகாடமி சார்பாக திருத்துவபுரம் பொன் மஹாலில் மாவட்ட அளவிலான ஓணம் பூக்கோலம் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து சுமார் 45 சுய உதவிக் குழு (SHG) அணிகள் பங்கேற்றன. இதில் மாறப்பாடி, காட்டத்துறை மற்றும் தக்கலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த KKSSS சுய உதவிக் குழுக்களிலிருந்து எட்டு அணிகள் கலந்துகொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தின. நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கர்நாடக மாநில ADMK முன்னாள் மாநில தலைவர் பெங்களூர் திரு. புகழேந்தி, அவர்கள் கலந்து கொண்டார். இந்த போட்டியில் மாறப்பாடியைச் சேர்ந்த புனித அன்னை தெரசா சுய உதவிக் குழு முதலிடத்தைப் பெற்று ₹7,000 ரொக்கப்பரிசு பெற்றனர். புனித ஆண்றனி சுய உதவிக் குழு இரண்டாம் இடத்தைப் பிடித்து ₹5,000 ரொக்கப்பரிசு பெற்றனர்.

அன்னை தெரசாள் படுக்கை நோயாளிகள் அலகு

கன்னியாகுமரி சமூக சேவை சங்கதின் அன்னை தெரசா படுக்கை நோயாளிகள் அலகு (Mother Therasa Palliative Care)

படுக்கையிலேயே தளர்வுற்றிருக்கும் நோயாளிகளுக்கான தன் சேவையை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய் போன்ற கடுமையான, உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு வியாழக்கிழமையும் சிறப்பு உதவி வழங்கப்படுகிறது. இந்நோயாளிகளின் மிகுந்த பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் கருத்தில் கொண்டு, அரசு மருத்துவக் கல்லூரி, ஆசாரிபள்ளம் மற்றும் நெய்யூர் CSI மெடிக்கல் மிஷன் மருத்துவமனை ஆகியவற்றுடன் இணைந்து, சிறுநீரக நோயாளிகளுக்கான டயாலிசிஸ் மற்றும் புற்றுநோயாளிகளுக்கான கீமோதெரபி போன்ற இன்றியமையாத சிகிச்சைகளுக்கு தடையற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சேவையின் முக்கிய அம்சமாக, நோயாளிகளுக்கு இலவச ஆம்புலன்ஸ் சேவை வழங்கப்படுகிறது. இதனால் அவர்கள் சிகிச்சை மையங்களில் பயணம் செய்ய மிகவும் எளிமையாக உள்ளது.

ஓணம் கொண்டாட்டம் – தெற்றியோடு

தெற்றியோடு மையத்தின் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சார்பில் ஓணம் கொண்டாட்டம் ஆகஸ்ட் 20 அன்று ஆசீர் வித்யாலயா சிறப்புப் பள்ளியில் மகிழ்ச்சியுடன் நடைபெற்றது. சிறப்பு பள்ளி குழந்தைகளுக்கு மகிழ்ச்சியையும் அன்பையும் பகிர்ந்து கொள்வதே இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாக இருந்தது. காலையில் குழு உறுப்பினர்களுக்கு ஓட்டப்பந்தயம், பந்து சேகரித்தல், பந்து பரிமாற்றம் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுகள் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்காக நடத்தப்பட்டன. இவை அவர்களின் குழந்தைப் பருவ நினைவுகளை மீட்டெடுத்தன. தொடர்ந்து ஓணம் கொண்டாட்டம் சிறப்பு பள்ளி குழந்தைகளுடன் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி மாணவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றனர். கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி தலைமை வகித்தார். அசீர் வித்யாலயா தலைமையாசிரியர் அருட்சகோதரி மேரி டோம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மாணவர்களின் நடனம் மற்றும் பாடல் நிகழ்ச்சிகள் அனைவரையும் மகிழ்வித்தன. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிறைவாக, சுய உதவிக் குழுவினர் மாணவர்களுக்கு ஓணம் விருந்து வழங்கினார்கள்.

ஓணம் மற்றும் சுதந்திர தினக் கொண்டாட்டம்

மாறப்பாடி மையத்தின் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சார்பில்

ஓணம் மற்றும் சுதந்திர தினக் கொண்டாட்டம் ஆகஸ்ட் 24 அன்று புனித தோமையார் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலையில் பூக்கோலம் மற்றும் குழுப் பாடல் போட்டிகள் நடைபெற்றன. ஓணம் மற்றும் தேசப்பற்று சார்ந்த கருப்பொருள்களை மையமாகக் கொண்டு; கலைப் போட்டிகள் நடைபெற்றன. மதிய உணவு இடைவேளைக்கு பின் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. தொடர்ந்து நடைபெற்ற விழாவில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி தலைமை வகித்தார். புனித தோமையார் ஆலய அருட்தந்தை மிஜோ செபாஸ்டியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சுய உதவிக் குழு உறுப்பினர்களின் கலைநிகழ்வுகள் விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்த்தன.

மூத்த சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சுற்றுலா

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) சார்பில், ஆகஸ்ட் 22 அன்று படந்தாலுமூடு, முழுக்கோடு, களியல், பத்துக்காணி மற்றும் மாறப்பாடி பகுதிகளைச் சேர்ந்த 46 மூத்த சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்காக மகிழ்ச்சியான சுற்றுலா ஏற்பாடு நடைபெற்றது. புலியூர்குறிச்சி ஆலயம், கோட்டார் ஆலயம், சுசீந்திரம் கோவில், சூழல் பூங்கா மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்களுக்கு அவர்கள் சென்றனர். இயற்கை அழகையும் ஆன்மிகச் சிறப்பையும் ரசித்த உறுப்பினர்கள், ஒருவருக்கொருவர் மற்ற மையங்களுடன் உரையாடி மகிழ்ந்தனர்.

அருட்தந்தை மகேஷ்
செயலர்

வின்செண்ட்-தே-பவுல் சபை

தக்கலை மத்திய பேரவையின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு

தக்கலை மத்திய பேரவையின் புதிய தலைவர் சகோ எட்வின்சன் மற்றும் பொறுப்பாளர்களின் பொறுப்பேற்பு நிகழ்வு 16.08.2026 அன்று கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து, தமிழக மண்டல ஒருங்கிணைப்பாளர் சகோதரர் சைமன் ஜூட்ரன் அவர்கள் புதிய தலைவருக்கு உறுதிமொழியைச் செய்து வைத்து, பொறுப்பேற்பு நிகழ்வை சிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை ஆன்டனி ஜோஸ், KKSSS இயக்குனர் அருட்தந்தை ஆன்றனி மகேஷ் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும், குமரி மாவட்டத்தின் கோட்டாறு, மார்த்தாண்டம், குழித்துறை மத்திய சபைகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், வட்டார சபைத் தலைவர்கள், கிளை சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என 300-க்கும் மேற்பட்ட வின்செண்டியர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

புதிய நிர்வாகிகள் தங்களது பொறுப்புகளை அர்ப்பணிப்பு உணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும் ஏற்று, ஏழை எளிய மக்களின் நலனுக்காகவும், வின்செண்ட் தே பவுல் சபையின் வளர்ச்சிக்காகவும் சிறப்பாக பணியாற்ற உறுதியேற்றனர். இந்நிகழ்வு தக்கலை மத்திய பேரவையின் புதிய நிர்வாகப் பயணத்திற்கு சிறப்பான தொடக்கமாக அமைந்தது.

வைரவிழா கொண்டாட்டம்

மஞ்சாலுமூடு வட்டார சபைக்கு உட்பட்ட மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் கிளை சபையின் வைரவிழா கொண்டாட்டம் ஆகஸ்ட் 16 அன்று நடைபெற்றது. TRCC ஒருங்கிணைப்பாளர் சகோ ஜூட்ரன் பங்கேற்றார். வைர விழா நினைவாக புனித வின்சென்ட் தே பவுல் சொருபம் அமைந்த கெபி பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்கள் திறந்து வைத்தார். மத்தியசபை தலைவர், துணை தலைவர், செயலர், திட்ட அலுவலர் ஆகியோர் பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தனர். பேரருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் அவர்களோடு கிளைசபை தலைவர் சகோ ஜினோ அவர்களும் கிளைசபை உறுப்பினர்கள் இணைந்து ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

ஆழ்ந்த இரங்கல்கள்

களியல் வட்டாரச்சபையின் மேனாள் தலைவர் சகோ. தனிஸ்லாஸ் (முழுக்கோடு) அவர்கள் 22.08.26 அன்று இறையடி சேர்ந்தார். அவரது மறைவிற்கு தக்கலை மத்திய பேரவை சார்பில் ஆழ்ந்த இரங்கல்களும் செபங்களும். அவரது பணியை நினைவுகூறும் வண்ணம் மத்திய சபை தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் அவரது அடக்க நிகழ்வில் பங்கேற்று அவரது ஆன்ம இளைப்பாறுதலுக்காக செபித்தனர்.

சகோ. மெரின் சுஜித்
செய்தி தொகுப்பாளர்

மறைமாவட்டச் செய்திகள்

புனித அல்போன்சா திருத்தல திருவிழா

நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல திருவிழா, 2026 ஜூலை 24 அன்று, மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்களின் தலைமையில் திருக்கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமானது. பத்தாம் நாள் திருவிழா 2026 ஆகஸ்ட் 2 அன்று, காலை 9:30 மணிக்கு அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் தலைமையில் புனித அல்போன்சா சிறப்பு நவநாள் செபம் நடைபெற்றது; அதனைத் தொடர்ந்து, மேதகு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி சிறப்பாக நடைபெற்றது. மறைமாவட்ட அருட்பணியாளர்கள், அருட்கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் திரளாக கலந்து கொண்டனர். திருப்பலியைத் தொடர்ந்து ஆடம்பரத் தேர்பவனி நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. அன்றைய நாள் மாலையில் விரிவாக்கப்பட்ட மறைபரப்பு தளங்களின் அருட்பணியாளர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் கொடி இறக்கப்பட்டு, திருவிழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன. புனித அல்போன்சா திருத்தல பங்குத்தந்தை அருட்தந்தை சனில் பந்திச்சிறக்கல், உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை பிபின் கொய்க்குடியல் அனைத்து நிகழ்வுகளையும் சிற்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

வியன்னி தின கொண்டாட்டம்

அருட்பணியாளர்களின் பாதுகாவலரான புனித ஜான் மரியா வியான்னியின் திருவிழா கொண்டாட்டம், 2026 ஆகஸ்ட் 4 அன்று முக்கூட்டுக்கல் புனித மரியன்னை இளங்குருமட வளாகத்தில் (Minor Seminary) நடைபெற்றது. காலை 9:30 மணிக்கு நற்கருணை ஆராதனையுடன் நிகழ்வுகள் தொடங்கியது. தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றது. அருட்தந்தையர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையிலான கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மேதகு ஆயர் தலைமை தாங்கினார். இறுதியில் மதிய உணவுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது. 'ரீஜென்ட்' (Regent) சகோதரர்கள் மற்றும் அருட்தந்தைர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் மற்றும் அனைத்துத் தயாரிப்புகளையும் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

புனித அல்போன்சா அகாடமி கலைப் போட்டிகள்

நாகர்கோவில், புனித அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி சார்பாக'புனித அல்போன்சா அகாடமி ஃபார் எக்ஸலன்ஸ்' (St. Alphonsa Academy for

Excellence) 25 ஆவது கலைப் போட்டிகள், 2026 ஆகஸ்ட் 8 அன்று நடைபெற்றது. இந்திய விஞ்ஞானி டாக்டர் டெல்லிபாபு விஜயகுமார் இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த 75 பள்ளிகள் மற்றும் 20 கல்லூரிகளிலிருந்து மொத்தம் 2,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கேற்றனர். பேச்சுப் போட்டி, வினாடி-வினா, கட்டுரை எழுதுதல், தனிப்பாட்டு, ஓவியம், நடனம் மற்றும் பல வகையான போட்டிகளில் பங்கேற்பாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். தொடர்ந்து பரிசளிப்பு விழா ஆகஸ்ட் 22அன்று நடைபெற்றது. நாகர்கோவில் பயனியர் குமாரசாமி கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் ஜெயசேகரன் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கி, வெற்றியாளர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். பள்ளியின் தாளாளர் அருட்தந்தை சனில் ஜான் மற்றும் குழுவினர் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

இளங்குருக்களுக்கான உருவாக்கல் பயிற்சி

தக்கலை மறைமாவட்ட இளம் குருக்களுக்கான இரு நாள் தொடர் பயிற்சி முகாம், 2026 ஆகஸ்ட் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் 'சங்கமத்தில் நடைபெற்றது. "குருத்துவ வாழ்வில் நேர்மறை மனப்பான்மையின் அருள்" என்ற தலைப்பிலான ஒரு சிறிய அமர்வுடன் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் துவக்கி வைத்தார். முதல் நாள் காலையில், உறவியம் (Uraviyam) இயக்குனர் அருட்பணி மிஜோ புத்தன்புரையில் அவர்கள், "பல்வேறு வழிகளில் நற்செய்தியைப் பறைசாற்றுதல்" குறித்த அமர்வை நடத்தினார். மதிய உணவுக்கு பின், அருட்பணி வினு D ஜோசப் அவர்கள் "நற்கருணை ஆராதனை" குறித்த அமர்வை வழிநடத்தினார். தொடர்ந்து கூரியா உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. அடுத்த நாள் ஆகஸ்ட் 12 அன்று, அருட்பணி ராபின்ஸ் குழிகோடில் அவர்கள், "ஊடகங்கள் வழியாக நற்செய்திப் பணி" குறித்த அமர்வை வழிநடத்தினார்.

ஆயர் மாமன்றம்

கக்கனாட், மவுண்ட் செயின்ட் தாமஸில் (Syro-Malabar Church Major Archiepiscopal Curia) சிரோ-மலபார் சபையின் 34-வது ஆயர் மாமன்றத்தின் (Synod) இரண்டாம் அமர்வு 2026 ஆகஸ்ட் 17 முதல் 28 வரை நடைபெற்றது. உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் தலைமையில் நடைபெற்ற இந்த மாமன்றத்தில், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மறைமாவட்டங்களைச்

சேர்ந்த ஆயர்கள் கலந்துகொண்டனர். திருச்சபையின் கருத்துக்கள், மேய்ப்புப்பணி மற்றும் நிர்வாகம் தொடர்பாக விவாதமும் நடைபெற்றது. திருத்தூதுப் பீடத்தின் (Holy See) முன் அனுமதியுடன், கோட்டயம் உயர்மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக அருட்தந்தை தாமஸ் அனிமூட்டில் (வயது 64) தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், மேய்ப்புப்பணி சார்ந்த நல்லிணக்கம், வழிபாட்டு முறை ஒருமைப்பாடு மற்றும் குறிப்பிட்ட சில உயர்மறைமாவட்டங்களில் நீண்டகாலமாக நிலவும் நிர்வாகம் மற்றும் வழிபாட்டு முறை சார்ந்த கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் குறித்தும் இந்த மன்றம் விவாதித்தது.

அருட்தந்தையர்களுக்கான ஊடகப்பயிற்சி

தக்கலை மறைமாவட்ட ஊடகம் துறை சார்பாக, 2026 ஆகஸ்ட் 24, அன்று தக்கலை சங்கமத்தில் அருட்தந்தையர்களுக்கான சிறப்பு ஊடகப் பயிற்சி நடைபெற்றது. அருட்தந்தை ராபின்ஸ் குழிக்கோடில் நிகழ்வுகளை வழிநடத்தினார். நவீன தகவல் தொடர்பின் பல முக்கியப் பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. அடிப்படைப் புகைப்படம் எடுத்தல், காணொளிப் பதிவு, காணொளித் தொகுப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகளின் நடைமுறைப் பயன்பாடு ஆகியவை குறித்து வகுப்புகள் நடைபெற்றது.

விரிவாக்கப்பட்ட பள்ளிக்கட்டிட மந்திரிப்பு

தென்காசி, புலரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் விரிவாக்கப்பட்ட கட்டிடத்தின் மந்திரிப்பு 2026 ஆகஸ்ட் 31 காலை 10:00 மணியளவில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் தாளாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றது. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் சமூகத்தை சார்ந்த அக்கம் பக்கத்தினர் கலந்து கொண்டனர்.

புதிய ஆலய அடிக்கல் நாட்டுவிழா – நித்திரவிளை

நித்திரவிளை, ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தின் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 2026 ஆகஸ்ட் 30 அன்று காலை 11:15 மணியளவில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் திருப்பலிக்கு தலைமை தாங்கினார். தொடர்ந்து ஆயர் அவர்களால் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலய பங்குதந்தை பேரருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தார்.

மறைவட்டச் செய்திகள்

தூசைபுரம்

▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

2026 ஆகஸ்ட் 09 அன்று பங்குத்தந்தை அவர்களின் பெயர் கொண்ட விழா கொண்டாடப்பட்டது திருப்பலி முடிந்தவுடன் பூங்கொத்து கொடுத்து பொன்னாடை போர்த்தி கேக் வெட்டி சிறப்பு பரிசும் வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 14 அன்று, மேழக்கோடு திருத்தலத்திற்கு அருட்தந்தை, அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் திருப்பயணம் சென்றனர்

▶ புனித தோமையார் ஆலயம் – மாதாபுரம்

ஆகஸ்ட் 28 அன்று சூசைபுரம் மறைவட்டத்தில் மறைக்கல்வி மாணவர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கில் மாணவர்கள் மற்றும் அருட்சகோதரி ட்ரீசா அவர்களும் கலந்து கொண்டார்கள்

▶ தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

ஆகஸ்ட் 15 சனிக்கிழமை அன்று செல்வி ஜோனாவுக்கு பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ், அருட்தந்தை ஜியோ, அருட்தந்தை அனில்ராஜ் ஆகியோர் தலைமையில் முதல் திருவிருந்து வழங்கப்பட்டது

ஆகஸ்ட் 23 அன்று 12.00 மணியளவில் அருட்தந்தை குரியன் அவர்கள் தலைமையில் திருவிழா பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து பிற்பகல் 2.00 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் திருப்பணியாளர்கள் கூட்டமும் நடைபெற்றது.

ஆகஸ்ட் 22 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு நற்கருணை ஆராதனையும் அதைத்தொடர்ந்து சிறப்பு வகுப்பும் நடத்தப்பட்டன.

▶ கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

தாத்தா பாட்டிகள் தினம் பங்கில் 2026 ஆகஸ்ட் 9 ஆம் தேதி திருப்பலியோடு கொண்டாடப்பட்டது. அனைவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். வாழ்த்துரை, நினைவு பரிசு, ஜெபமாலை, தேநீர் என அன்றைய தினம் சிறப்புற நினைவு கூரப்பட்டது. ஆகஸ்ட் 10 ஆம் தேதி திரு S அருள் அவர்கள் வீட்டில் வைத்து புனித ஆல்போன்சா உறவிய ஆண்டு விழா நடைபெற்றது. பங்குத்தந்தை அருள் தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அருட்சகோதரிகள் கைக்காரர்கள், செயலாளர் என திரளான மக்கள் பங்கேற்றனர்.

ஆகஸ்ட் 15 ஆம் தேதி நாட்டின் சுதந்திர தினம், மரியன்னையின் விண்ணேர்ப்பு ஆகியவை பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

16 ஆம் தேதி பங்கு இளையோர் முன்னின்று நடத்திய உணவுத் திருவிழா நடைபெற்றது. அதைத்தொடர்ந்து, SABS அருட் சகோதரிகள் முன்னின்று நடத்திய மருத்துவ முகாம் பங்கில் சிறப்பாக நடைபெற்றது. 28 ஆம் தேதி சூசைபுரம் பங்கில் வைத்து நடைபெற்ற மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கில் பங்கிலிருந்து திரளான மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

மஞ்சாலுமூடு

புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு

ஆகஸ்ட் 8 அன்று முன்னாள் பங்குதந்தை ஜோசப் மடத்தில் அவர்களின் முதல் ஆண்டு நினைவுத் திருப்பலி நடைபெற்றது. அகஸ்ட் 15 அன்று காலை திருப்பலிக்கு பின் தேசிய கொடி ஏற்றப்பட்டது. தொடந்து உறவியங்கள் சார்பாக மாலை 4 மணி வரை ஜெபமாலை நடத்தப்பட்டது. இறுதியில் சிறப்பு ஆராதனையும் நடத்தப்பட்டது.

ஆகஸ்ட் 16 அன்று மதியம் 2 மணி முதல் 4 மணி வரை நடைபெற்ற உறவிய பணியாளர்களுக்கான சிறப்பு தியானத்தில் 135 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அன்று மாலை 5.00 மணியளவில் வின்சென்திய கிளை தொடங்கி 60 ஆவது ஆண்டை கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட கெபியை மறைமாவட்ட குருகுலமுதல்வர் திறந்து வைத்து பொது கூட்டமும் நடைபெற்றது. ஆகஸ்ட் 23 அன்று மாலை மாதர் ஜோதிஸ் சார்பாக ஓணம்

திருவிழா பல்வேறு நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது.
ஆகஸ்ட் 26 ஆம் தேதி காலை திருப்பலிக்கு பின் மிஷன் லீக் இயக்கத்தின் சார்பாக அத்தப்பூக்கோலப் போட்டி நடத்தி ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது.
புனித அகுஸ்தீனாரின் திருவிழாவை முன்னிட்டு உதவி பங்கு தந்தை அனூப் அவர்களின் பெயர் கொண்ட தினம் கொண்டாடப்பட்டது.

புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு

ஆகஸ்ட் 09 அன்று காலை திருப்பலியுடன் மாதர் ஜோதிஸ் இயக்க தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் பிலாங்காலை மறைவட்ட ஆலய பங்குத்தந்தை பேரருட்தந்தை ரென்னி அவர்கள் கலந்து கொண்டார்கள். ஆகஸ்ட் 16 அன்று மாதாவின் விண்ணேற்பு விழா மறைக்கல்வி மாணவ, மாணவிகளால் கொண்டாடப்பட்டது. ஆகஸ்ட 30 அன்று காலை புனித எவுபிராசியம்மா திருவிழா மற்றும் முதியோர் தினம் மறைக்கல்வி மாணவ, மாணவிகளால் கொண்டாடப்பட்டது.

திருச்சிலுவை ஆலயம் – மாலைக்கோடு

மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் 02.08.2026 அன்று பலிபீடம் கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் தங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரின் பெயர்களும் எழுதப்பட்ட கற்கள் காணிக்கையாக கொண்டு வந்தனர். திருப்பலியின் போது பங்குத்தந்தை அதைப் பெற்றுக்கொண்டார்.

திருக்குடும்ப ஆலயம் – முக்கூட்டுக்கல்

முக்கூட்டுக்கல், திருக்குடும்ப தேவாலயத்தில் 2026-27 ம் ஆண்டின் மாதர் ஜோதிஸ் இயக்க தொடக்க விழா 2026 ஆகஸ்ட் 09 ஞாயிற்றுக்கிழமை பங்குத்தந்தை அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்களால் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கப்பட்டது. சிறப்பு காணிக்கை பவனி, திருப்பலி வாசகங்கள் மற்றும் இயக்கம் சார்ந்த மன்றாட்டுகள் ஆகிய அனைத்தும் மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்களால் ஏறெடுக்கப்பட்டது.

ஓணம் பண்டிகை 23.08.26 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின்

பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் இளையோர் இயக்கத்தின் சார்பாக கொண்டாடப்பட்டது. இதில் ஓண ஏலம் மற்றும் சிறியோர் முதல் பெரியவர்கள் வரை அனைத்து பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்கு உணவு பொருட்கள் பரிசாக வழங்கப்பட்டது. முன்னாள் பங்குதந்தை அருட்பணி. சுபின் புத்தன்புரைக்கல் அவர்கள் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்தினார்.

களியல் மறைவட்டம்

▶ திரு இருதய ஆலயம் – பள்ளிக் கோணம்

ஆகஸ்ட் 02 அன்று ஞாயிற்றுக்கிழமை நாகர்கோவில், புனித அல்போன்சா திருத்தல திருவிழா திருப்பலியில் பள்ளிக்கோணம் பங்கு மக்கள் கலந்து கொண்டனர்.

ஆகஸ்ட் 09 அன்று மாறப்பாடி ஆலயத்தில் நடைபெற்ற களியல் மறைவட்ட அளவிலான உறவிய பொறுப்பாளர்களின் கருத்தரங்கில் உறவிய பணியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

ஆகஸ்ட் 15, சனிக்கிழமை அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா, மற்றும் சுதந்திர தினவிழா ஆடம்பர திருப்பலி மற்றும் கொடி ஏற்றுதல், இனிப்பு வழங்குதல் என சிறப்பிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 23 அன்று ஓணம் பண்டிகை, அந்தப் பூ கோலம், ஆடம்பர திருப்பலி, திருவாதிரை நடனம், விளையாட்டு போட்டிகள், இனிப்பு வழங்குதல் ஆகிய அனைத்து நிகழ்வுகளும் இளையோர் இயக்கம் சார்பாக சிறப்பிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 28 அன்று புனித எவுப்பிராசியம்மா திருநாள் சிறப்பிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 29 அன்று மாதர் ஜோதிஸ் இயக்க ஆகஸ்ட் மாத Task எழுத மேழக்கோடு புனித அசிசியார் ஆலயம் கள ஆய்வு செய்ய அருட்சகோதரி செலிக்கொரின் CMC அவர்கள் தலைமையில் மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

▶ புனித தோமையார் ஆலயம் – மாறப்பாடி

ஆகஸ்ட் 2 நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல திருவிழாவில், பங்குத்தந்தையின் தலைமையில் அருள்சகோதரிகள் மற்றும் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

ஆகஸ்ட் 9 அன்று உறவிய பொறுப்பாளர்களுக்கான கருத்தரங்கு, மாறாப்பாடி பங்கில் நடைபெற்றது. பல்வேறு பங்குகளிலிருந்து வந்த உறவிய

பொறுப்பாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

ஆகஸ்ட் 15 அன்று மரியன்னை விண்ணேற்புப் பெருவிழா மற்றும் சுதந்திர தின விழாவை முன்னிட்டு காலை 6.30 மணிக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து தேசியக் கொடியேற்ற நிகழ்வு நடைபெற்றது. பின்னர் ஏஞ்சல்ஸ் மிட் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. விழாவின் நிறைவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 23 அன்று மறைக்கல்வி மாணவர்களுக்கான எழுத்துப் போட்டி பங்களவில் நடைபெற்றது. மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

ஆகஸ்ட் 29 அன்று பங்குத்தந்தையின் தலைமையில் மாதர் ஜோதிஸ் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி வினிதா SH மற்றும் உறுப்பினர்கள் இணைந்து மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசியார் திருத்தலத்திற்கு ஆன்மிகத் திருப்பயணம் மேற்கொண்டனர். அங்கு பங்குத்தந்தையின் தலைமையில் நற்கருணை ஆராதனை, பாவசங்கீர்த்தனத்திற்கான ஆயத்த வகுப்பு மற்றும் ஒப்புரவு அருளடையாளம் ஆகியவை நடைபெற்றன.

▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

மரியன்னையின் விண்ணேற்பு தினம் மற்றும் இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு 2026 ஆகஸ்ட் 15 அன்று காலை 7 மணியளவில் செபமாலை மற்றும் திருப்பலி நடைப்பெற்றது . அதைதொடர்ந்து பங்கு தந்தை அருட்பணி. ஜார்ஜ் கண்டத்தில் மற்றும் அருட்சகோதரி. கிளாரா தலைமையில் தேசிய கொடி ஏற்றப்படடது. இறுதியில் இனிப்புகள் வழங்கப்பட்டது.

தக்கலை – பிலாங்காலை மறைவட்டம்

▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

அருட்தந்தையர்களின் பாதுகாவலரான புனித ஜாண்மரிய வியானி திருவிழா நாள் அன்று திருப்பலி முடிந்த உடன் பங்குதந்தைக்கு வாழ்த்துக்கள்

தெரிவிக்கப்பட்டது. இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி ஆராதனை நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 15 ம் தேதி மாதாவின் விண்ணேற்பு திருவிழா கொண்டாடப்பட்டது. புனித அன்னை மரியாள் உறவியம் சார்பில் நேர்ச்சை வழங்கப்பட்டது பள்ளிக்கூட மைதானத்தில் தேசியக் கொடியேற்றப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் 16 ம் தேதி புதிய அலங்கார வளைவு அர்ச்சிப்பு விழா நடைபெற்றது. முன்னாள் பங்குதந்தை பேரருட்தந்தை ஜோஷி தேவலக்கரா CMI அவர்களின் தலைமையில் திருப்பலியும், CMI துணை மாகாணத் தலைவர் அருட்தந்தை ஜோஸ் பூவாட்டில் CMI அவர்கள் தலைமையில் அர்ச்சிப்பு செபங்களும் நடத்தப்பட்டது. அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை ரென்னி களத்தில் CMI அவர்கள் முன்னின்று நடத்தினார். அன்றைய தினம் ஒருவருடத்திற்கு முன்பு கையால் எழுத தொடங்கிய திருவிவிலியம் எழுதி முடிக்கப்பட்டு; அதை எழுத ஊக்கப்படுத்தி அறிவுரை வழங்கிய முன்னாள் பங்குதந்தை ஜோஷி தேவலக்கரா CMI அதைப்பெற்றுக்கொண்டு ஆசி

வழங்தினார். ஆயர் வழங்கிய பாராட்டு கடிதமும், திருவிவிலிய பிரதியும் ஆலயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

- **புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – காட்டாத்துறை**

ஆகஸ்ட் 2-ம் தேதி புனித அல்போன்சா திருத்தல திருவிழாவை முன்னிட்டு பங்கு மக்கள் இணைந்து திருப்பயணம் சென்றனர்.

ஆகஸ்ட் 9-ம் தேதி ஆலயத்தில் மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் துவக்க விழா நடைபெற்றது. ஆகஸ்ட் 15-ம் தேதி புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு

திருநாள் ஆலயத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் அன்று தேசிய கொடி ஏற்றி சுதந்திர தின விழாவும் கொண்டாடப்பட்டது.

- **புனித சூசையப்பர் ஆலயம் – நீதிபுரம்**

முதல் வெள்ளி திருப்பலி ஆராதனை நடைபெற்றது. புனித அல்போன்சா ஆலய திருவிழா 10 ம் நாள் திருப்பலியில் பங்குமக்கள் கலந்து கொண்டனர். ஆகஸ்ட் 15 ம் தேதி மாதாவின் விண்ணேற்புதிருவிழா திருப்பலி நடைபெற்றது.

தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா

தென்காசி மறைத்தள செய்திகள்

தென்காசி மறைத்தளம் சார்பாக ஆகஸ்ட் 2 ஞாயிற்றுக்கிழமை, இறை மக்கள் அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் இணைந்து நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொண்டனர். தென்காசி மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சுமேஷ் வள்ளியாம் தடத்தில் மற்றும் தென்காசி மறைத்தள அருட்தந்தையர்கள் இணைந்து ஆடம்பரத் திருப்பலி நிறைவேற்றினார்கள்.

மாதாந்திர தியானம்

ஆகஸ்ட் மாத தியானம் புளியறை புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் ஆகஸ்ட் 8, சனிக்கிழமை நடத்தப்பட்டது . காலை 9:30 மணியளவில் செமாலையுடன் ஆரம்பமானது. புதுவாழ்வு தியான இல்லத்தை சார்ந்த சகோதரர் பிரான்சிஸ் சேவியர் அவர்கள் தியானத்தை வழி நடத்தினார்.

புனித மரியன்னை ஆலயம் – வாஞ்சி நகர்

ஆலய திருவிழா ஆகஸ்ட் மாதம் 13, 14, 15, 16 ஆகிய நான்கு நாட்கள் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை சுமேஷ் வள்ளியாம்தடத்தில் அவர்கள் கொடியேற்றி திருவிழாவை தொடங்கி வைத்தார். முதல் நாள் திருவிழா அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். இரண்டாம் நாள் அருட்தந்தை ஜோகேஷ் போளச்சிற அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். அருட்தந்தை ஜான்ஜோசப் அவர்கள் மறையுரை வழங்கினார். அன்றைய நாள் இறந்தோருக்காக திருப்பலி

நிறைவேற்றப்பட்டது. அதன் பின்பு பக்த இயக்கங்களின் ஆண்டு விழா சிறப்பிக்கப்பட்டது. மூன்றாம் நாள் அருட்தந்தை ரின்ஸ் கடன்தோட்டு MCBS அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து திருப்பவனி நடத்தப்பட்டது. இறுதி நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அருட்தந்தை ரோபின் கூருமுள்ளில் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. வல்லம் பங்கை சார்ந்த அருட்தந்தை விசுவாச ஆரோக்கியராஜ் அவர்கள் மறையுரை வழங்கினார். இறுதியில் பங்குதந்தை அவர்களால் கொடி இறக்கப்பட்டது. அனைத்து நாட்களிலும் அன்பின் விருந்து வழங்கி மிகச் சிறப்பாக திருவிழா கொண்டாடப்பட்டது.

மறைத்தள அருள் பணியாளர்கள் மற்றும் அருள்கன்னியர்களுக்கான கூட்டம்

தென்காசி மறைத்தள அருள் பணியாளர்கள் மற்றும் அருள்கன்னியர்களுக்கான கூட்டம், 2026 ஆகஸ்ட் 22 அன்று தென்காசி அன்பு இல்லத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமை தாங்கினார். மாலை 5.45 மணியளவில் ஆராதனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. அருட்தந்தை டெரின் MCBS அவர்கள் ஆராதனையை வழிநடத்தினார். தொடர்ந்து ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் பக்த இயக்கங்களின் செயல்பாடுகளை குறித்து கலந்துரையாடப்பட்டது.

அமலா மரியா சிற்றாலயம் மந்திரித்தல்

ஆகஸ்ட் 31 அன்று தென்காசி ரயில்வே கேட் அமல மரியா என்ற மறைத்தள சிற்றாலயம், மறைமாவட்ட ஆயர் மேதகு ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட் தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் ஆவணகாப்பாளர் ஆண்டனி ஜோஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

MONTHLY AGENDA – SEPTEMBER 2026		
DATE	**DAY**	**EVENTS**
1	Tue	**KKSSS :** Skill Training **PC :** Beginning of the Diploma Course in Media Centre
4	Fri	**ASc :** Chairman's Visit
5	Sat	**SMYM :** HM Animators Meeting **PSSS :** Class on Charity Day **ASc :** Teacher's Day Celebration & Competitions
6	Sun	**VC :** Vocation Promotor visit – Manjalumoodu Forane **SMYM :** Nithiravilai forane unit executive meeting **CML :** Study the History of the Nativity of Mary **STI :** Class **SVP :** CC Meeting **CAT :** XI Teachers Training Program – Padanthalumoodu **URM :** Uraviyam Animators, Organizers and leaders orientation programme in Nithiravila Forane
8	Tue	**MIG :** Online Rosary
11	Fri	**FA :** Marriage Preparation Course
12	Sat	**FA :** Marriage Preparation Course **MJ :** Diocesan Leaders Meet **CRI :** Monthly Recollection **TM :** Bible Convention at Vanchinagar **CAT :** HM Meeting

13	Sun	**URM :** Forane Directors and Animators meeting and forming forane steering committee Thuckalai - Pilankalai Forane **SMYM :** Forane election **CML :** Read the short biography of Fr.Joseph Maliparambil in group meeting on his Episcopal Ordination day **CML :** Pray for our Bishop Mar George Rajendran on his Episcopal Ordination day **CML :** Unit Visit **STI :** Class **SVP :** AC Meeting
14	Mon	**FA :** Doctor's Visit
15	Tue	**KKSSS :** General Medical Camp **MS :** Old age home Visit
19	Sat	**KKSSS :** Educare Class **CAT :** Last Date to Submit the list of Bible Fest writing Competition
20	Sun	**SMYM :** Forane Election **SVP :** AC Annual Day **URM :** Uraviyam Animators, Organizers and leaders orientation programme and forming forane level steering committee in Soosaipuram Forane
26	Sat	**SINAI :** One day Retreat **ASc :** Guidance Class for Non – Teaching Staff
27	Sun	**CML :** Diocesan Rally **KII :** Forane Level Monthly activity **SVP :** Patron's Day Celebration **SVP :** AC Annual Day
28	Mon	**VC:** Vocation Camp **HC:** World Heart day Awareness Programme
29	Tue	**PSSS :** Awareness Class : World Heart Day
30	Wed	**VC :** Vocation camp

Fr. Antony Jose, Co-ordinator

நமது பேராலயத்திற்காக செபிப்போம்

Aug 16

VINCENT DE PAUL SOCIETY ANNUAL DAY AT KALLUVILAI

LAYING OF THE FOUNDATION STONE OF THE NEW CHURCH BUILDING AT NITHRAVILAI

Aug 30

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570